THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.120/2019** | **PW.2** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு.அருள்சிலி | |
| Husband's Name | : திரு.ஜோசப் ராஜ்குமார் | |
| Village | : கள்ளிகுளம் | |
| Taluk | : | |
| Employment | : இல்லதரசி | |
| Age | : | Date:25.11.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A3 present. A1 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed, A2 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed, A4 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed.)**

**முதல் விசாரணை :-**

1. நான் கள்ளிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லதரசியாக உள்ளேன். அ.சா.1 எனது மகள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு எனது மகள் இரவு நேரத்தில் வீட்டில் படுத்திருந்தபோது, 1வது எதிரி தினேஷ் வீட்டின் மாடிப்படி வழியாக இறங்கி வந்து, எனது மகள் அணிந்திருந்த தாலி செயினை பறித்து சென்று விட்டார். தகவல் தெரிந்து நான் சென்று பார்த்தேன். அப்போது எதிரி வீட்டின் அருகே நின்றுக் கொண்டிருந்தார். மற்ற எதிரிகள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டார்களா என்று எனக்கு தெரியாது. போலீஸார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. சம்பவம் நடந்த அன்று இரவே போலீஸார் எனது மகள் வீட்டிற்க்கு போலீஸார் வந்தார்கள். அன்றே போலீஸார் எனது மகளை விசாரித்து, அவரிடம்

கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடைய மகளுடையதா என்று எனக்கு தெரியாது. நான் சாட்சியம் அளித்துள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1–க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3 வது மற்றும் 4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. 2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை, 3, 4 வது எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**<u>1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. 1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் 1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை :</u>**

5. இல்லை.